நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048, 05.05.2017ம் தேதி, வெள்ளிக்கிழமை மாலை 3.30மணி அளவில்நடைபெற்ற தென்காசி நகர்மன்றஅவசரக் கூட்டத்தின் நடவடிக்கை

வருகைதந்தவர்: திரு பி.ஏகராஜ்,
தனிஅதிகாரி,
தென்காசிநகர்மன்றம்.

**மன்றப்பொருள் 1**

தென்காசிநகராட்சியில்செயல்பட்டுவரும்பல்வேறுஅடிப்படைசேவைகிளில்ஒன்றான தெருவிளக்குகளை இயக்கி பராமரித்தல் காரணமாக மின்பயனீட்டுசெலவினம் மொத்த நிர்வாக செலவினத்தில் கணிசமான அளவில் உள்ளது. இதனை கருத்திற்கொண்டு மின் பயன்பாட்டினை குறைக்கும் விதமாகவும் அதன் செலவினங்களைகுறைக்கும் விதமாகவும் நகராட்சியிலுள்ள அனைத்து தெருவிளக்குகளையும், குறைந்தமின்சாரம் கொண்டு செயல்படக்கூடியஒளிர் உமிழ்விளக்குகளாக(LED)மாற்றி அமைத்திட முடிவு செய்யப்பட்டது. அதற்கானஅறிவிப்பினை மாண்புமிகு தமிழகமுதலமைச்சர் அவர்களால்கடந்த 29.08.2016 அன்று விதி எண்.110–ன் கீழ்சட்டப் பேரவையில்அறிவிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.39, நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.29.04.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கிஉத்திரவிடப்பட்டுவரப்பெற்றஅரசாணைமன்றத்தின் மேலான தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படிஅரசாணையின்படிஇந்நகராட்சியிலுள்ளஅனைத்துவகையானதெருவிளக்குகளையும் குறைந்தமின்சாரத்தில்செயல்படக்கூடியஒளிர் உமிழ்விளக்குகளாக(LED lights) மாற்றி அமைக்கவும் இதற்குரியசெலவினத்தை100%தனியார் முதலீட்டுடன் அமைத்துஅவர்கள் மூலமாகவேஇயக்கி பராமரித்திடவும்வழிவகைசெய்யப்பட்டுள்ளது.

இந்தவகையில் தெருவிளக்குகளை திறம்பட ஒளிர் உமிழ் விளக்குகளாகஉரிய மின் சேமிப்பு சாதனங்களைக் கொண்டு அமைத்திடகீழ்க்கண்டவழிமுறைகளைகடைப்பிடித்திடவும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நகராட்சியில்தற்போதுள்ளதெருவிளக்குகட்டமைப்புகளைஉரியமுறையில் ஆய்வு செய்துதற்போதையதன்மை அறிந்து அதற்கேற்பமாற்றி அமைத்திடவேண்டியஒளிர் உமிழ்விளக்குகளின் தன்மையை நிர்ணயித்துஅவற்றிற்கு ஆகும் செலவினைகணக்கிட்டு செலவுத்தொகையை மீளப் பெறும் திட்டக்காலத்தை கணக்கிட்டு உரியதிட்டவரைவுகளைதயாரித்துவழங்கிட ‘‘மின் சேமிப்புகணக்கீட்டு முகவர்களை’’ நியமித்தல்.

2. மின் சேமிப்புகணக்கீட்டுமுகவர்களால்தயாரித்துஅளிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரகமற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரக தொழில்நுட்ப குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும்திட்டவரைவின் அடிப்படையில் தகுதியான மின்சேமிப்பு நிறுவனத்தின் மூலம் திட்டத்தினை செயல்படுத்த வேண்டி தகுதியான மின்சேமிப்பு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து பட்டியல்படுத்துவதற்கான நடைமுறைகளை கடைப்பிடித்தல்.
3. மின்சேமிப்புகணக்கீட்டுநிறுவனத்தால்தயாரிக்கப்படும்திட்டவரைவின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி வரைவு தயார் செய்துஅவற்றினை பட்டியல்படுத் தகுதியான மின்சேமிப்பு நிறுவனங்களிடம் வழங்கி ஒப்பந்தப்புள்ளிகோரிஉரியமின்சேமிப்புநிறுவனத்தாரை / முதலீட்டாளரை / தெருவிளக்குகளை அமைத்து பராமரிப்பவரை தேர்வுசெய்துஒப்பந்தஅடிப்படையில்பணிமேற்கொண்டுபராமரிக்கவும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் தெருவிளக்கு கட்டமைப்புகளை ஒளிர் உமிழ்விளக்குகளுடன் இயக்கி பராமரிப்பதின் மூலம் ஏற்படுகின்ற மின்சேமிப்பு, அதன் பொருட்டு எதிர்பார்க்கப்படும் மின்கட்டணசேமிப்பு (அடிப்படையாண்டின் மின் கட்டண தொகையினை கொண்டுகணக்கீடவேண்டும்) சம்மந்தப்பட்டமுதலீட்டாளருக்குதிட்டக் காலம் முழுவதும் வழங்கப்படும். இந்தஅரசாணையின்படிமேற்குறியபத்தி(1)ல் குறிப்பிட்டவாறுமின்சேமிப்புகணக்கீட்டுமுகவர்களைநியமித்துதிட்டவரைவுதயாரிப்பதற் கான செலவினத் தொகையை திட்ட மதிப்பீட்டில்2% மிகாமல் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் பத்தி(1)ல் குறிப்பிட்டவாறுமின்சேமிப்புகணக்கீட்டுமுகவர்களை(Investment Grade Audit Agency)நியமித்தடவும் பத்தி (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு தகுதியான மின்சேமிப்பு நிறுவனங்களை கண்டறிந்து பட்டியலிடவும் அவ்வாறு பட்டியிலிடப்பட்டவருக்குமேற்படிநகராட்சிதெருவிளக்குகட்டமைப்புகளில்உரிய மின் சேமிப்பு சாதனத்தினை பொருத்து ஒளிர் மின் விளக்குகளைஅமைத்துஇயக்கி பராமரித்திட ஒப்பந்தப்புள்ளிகள்கோரவும், இறுதி வடிவாக்கம் செய்துதகுதியான 100%முதலீடுசெய்ய கூடிய மின்சேமிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் வரை தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகஆணையர்/ மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அங்கீகாரம் அளித்திடவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 3406/2016/இ1

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 115 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**<u>மன்றப்பொருள்: 2</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான மலையான் தெருவில் அரசு புறம்போக்கு இடத்தை திரு.த. இராமநாதன் என்பவர் ஆக்கிரமப்பு செய்திருந்தற்கு நகராட்சி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டதற்கு எதிராக திரு. த. இராமநாதன் என்பவரால் தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண். ஓ.எஸ். எண். 69/2017க்கு இந்நகராட்சியின் சார்பாக ஆஜரான வகைக்கு வழக்கறிஞர் திரு. எஸ். ஜோன்ஸ் அவர்களிடமிருந்து வழக்கு கட்டணம் ரூ.2500/– வழங்கக் கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கண்ட தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 725/17/எப்1)

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 2 | 2 | 116 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**<u>மன்றப்பொருள்: 3</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான கீழவாலியன் பொத்தை (எம்.எல்.ஏ அலுவலகம் அருகில்) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிப்பிடம் கட்டும் பணிக்கு திரு. எஸ். செண்பகம் த.பெ சொர்ணம் என்பவரால் தடையாணை பெறுவதை எதிர்த்து தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சாப்பு நீதிமன்றத்தில் கேவிட் மனு தாக்கல் செய்யப்பட் வகைக்கு நகர்மன்ற வழக்கறிஞர் திரு. எஸ். ஜோன்ஸ் அவர்களிடமிருந்து வழக்கு கட்டணம் ரூ.3,000/– வழங்கக் கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கண்ட தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 770/17/எப்1)

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 3 | 3 | 117 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**மன்றப்பொருள் : 4**

தென்காசி நகராட்சியின் 2016–2017ம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண். சி1/1258/2017

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 4 | 4 | 118 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**மன்றப்பொருள் : 5**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் ந.க.எண்.15981/2016/எச்1 நாள் 19.4.2017ம் தேதிய கடிதத்தில் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பொதுப்பணி அமைப்பின் கீழ் உள்ள மேலாளர், வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களின் நிலைகளை உயர்த்தவும், புதியதாக தோற்றுவிக்கவும் நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகராட்சி அரசாணை 85, ந.நி.ம.கு.வ.துறை நாள். 22/05/1998ல் இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி முதல் நிலை தரத்திற்கேற்றவாறு இந்நகராட்சியில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கவும், ஏற்கனவே உள்ள பணியிடத்தின் நிலைகளை உயர்த்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ | தற்போதுள்ள பணியிட விவரம் | தரம் உயர்த்தப்பட வேண்டிய பணியிட விவரம் | தற்போது பெற்று வரும் ஊதிய விகிதம் | நிலை உயர்த்தப்பட்டால் வழங்கப்பட வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மேலாளர், நிலை IV | மேலாளர், நிலை II | 9300-34800+4200 | 9300-34800+4400 |

| வ.எ | புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிட விபரம் | நிலை உயர்த்தப்பட்டால் வழங்கப்பட வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1 | வருவாய் அலுவலர் நிலை IV | 9300-34800+4200 |
| 2 | கணக்கர், நிலை IV | 9300-34800+4200 |

அ.கு தென்காசி நகராட்சி முதல்நிலை நகராட்சியாக இருப்பதாலும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் வருவாய் அதிகரித்துக் கொண்டு வருவதாலும், இந்நகராட்சியின் நிலைக்கேற்ப ஒரு வருவாய் அலுவலர் பணியிடம் 9300-34800 GP 4200 என்ற உதிய விகிதத்திலும், ஒரு கணக்கர் பணியிடம் 9300-34800 GP 4200 என்ற உதிய விகிதத்திலும் புதியதாக தோற்றுவிக்கவும், தற்போது வகுப்பு 4ல் உள்ள மேலாளர் பணியிடத்தினை வகுப்பு 2 மேலாளர் பணியிடமாக 9300-34800 GP 4400 என்ற ஊதிய விகிதத்தில் நிலை உயர்த்தவும் தீர்மானிக்கப்படுகிறது.

ந.க.எண்.1430/சி1/2017

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 5 | 5 | 119 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**மன்றப்பொருள் : 6**

தென்காசி நகராட்சி பொதுநிதி 2017-18ன் கீழ்கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்றதீர்மான எண்: 62 நாள்:31.01.2017ன்படி ஒப்புதல்வழங்கப்பட்டுள்ளது. அதன்படி03.05.2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குபட்டியல்தயார் செய்யப்பட்டுமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள்பெயர் | ஒப்பந்தப்புள்ளிவிலைவிகிதம் மதிப்பீட்டைவிடகூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | சுவாமி சன்னதிதெருவில்உள்ள ஆணையாளர் குடியிருப்பில் மராமத்துபணிகள்மேற்கொள்ளுதல் | 3.00 | திரு S.அருணாசலம் ஒப்பந்தக்காரர் | 0.19% குறைவு |
| | | | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 1.81% கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.19%குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதிருS.அருணாசலம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 6 | 6 | 120 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

தனிஅதிகாரி (ம) ஆணையாளர்,
தென்காசி நகராட்சி.